# Indian Polity Notes Part 7 in Tamil

## 7] அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள்

- இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் IV வது பகுதியில் உள்ளன.
- இது அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பு நாட்டை வழி நடத்த அரசு நெறிமுறைக் கோட்பாடுகளை வழங்கியுள்ளது. நாட்டை நடத்துவதற்கும் மக்களின் சமூக நலனைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இக்கோட்பாடுகள் சமூக, பொருளாதார அரசியல், நீதி, கல்வி, நிருவாகம் பண்பாடு மற்றும் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- சட்டங்கள் இயற்றும் போதும், அவற்றை நடைமுறைப்படுத்தும் போதும் பின்பற்ற வேண்டிய செயல் முறைகள் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் எனப்படும்
- மக்கள் நலனைப் பாதுகாப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- பெரும்பான்மையான நெறிமுறை கோட்பாடுகள் இந்திய அரசியலமைப்பு முகவுரையில் குறிப்பிட்டுள்ள சமூக, பொருளாதார நெறிகளை நிலைநாட்டுவதற்கு வழிகாட்டவல்ல கொள்கையாகத் திகழ்கிறது.
- இந்த நெறிமுறைக் கோட்பாடுகளை 4 வகைப்படுத்தலாம்.
    1. சமூக நலனை அடைய வழிகாட்டும் கோட்பாடுகள்.
    2. காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்.
    3. பன்னாட்டு அமைதியை ஏற்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்.
    4. பல்வகையான நெறிக் கோட்பாடுகள்.
- இந்திய அரசு எந்த நோக்கங்களை அடைவதற்காக அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்பதற்கு வழிகாட்டும் நெறிகளாக பல கொள்கைகள் இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

**சரத்து - 37**

இந்தப்பகுதியில் உள்ள நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் நீதிமன்ற விசாரணக்கு உட்பட்டதல்ல.

ஆனால் அரசு சட்டம் இயற்றும் போது இந்தக் கொள்கைகளை மதித்து நடைமுறைப்படுத்த முனைய வேண்டும்.

**சரத்து - 38**

மக்களின் நலன் மேம்பட, நிதி, சமூக, பொருளாதார, அரசியல் ஒழுங்குடன் இணைந்த, நீதியை அடிப்படையாக் கொண்ட ஒரு சமூக அமைப்பை உருவாக்கி பாதுகாக்க வேண்டும்.

வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கும், தகுநிலை, வசதி மற்றும் வாய்ப்புகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்ற அரசு முயல வேண்டும், தனிநபர்களுக்கிடையே மட்டுமல்லாது வேறுபட்ட இடங்களில் வசிக்கும் மக்கள் குழுக்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வுகளை அகற்ற அரசு முயல வேண்டும்.

**சரத்து - 39**

- குடிமக்கள், ஆண் – பெண் பேதமின்றி வாழ்வதற்கும், பொது நலனுக்காக வளங்களை பயன்படுத்துவதற்கும், பொருளாதார நீதியினை காக்கவும்
- ஆண் – பெண் இருபாலருக்கும் சமமான வேலைக்கு சமமான ஊதியம் கிடைப்பதற்கும், தொழிலாளர், ஆண் – பெண், குழந்தைப் பருவம் மற்றும் இளைஞர்கள் கைவிடப்படுவதற்கு எதிராகவும், குழந்தைகளை தவறாக பயன்படுத்தாத வகையிலும், குழந்தைகள் தங்களை நலமுடனும் சுரண்டலுக்கெதிராகவும் பாதுகாப்பது போன்றவற்றில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.
- பொருளாதார அமைப்பு செயல்பாட்டு முறைகள் பொதுவாக கேடு விளைவிக்காமலும் இருக்க வேண்டும்.
- தொழிலாளர், ஆண், பெண் ஆகியோரின் சுகாதார மற்றும் வலிமை பெறவும், இளம் வயது குடிமக்கள் பொருளாதாரத் தேவைகளுக்காக, அவர்களின் வயதிற்கும், வலிமைக்கும் பொருந்தாத துணைத் தொழிலுக்கு கட்டாயமாக செல்வதை தடுக்கம் வகையில் குழந்தைகளுக்கு சுகாதார சூழலையும், சுதந்திர மற்றும் மரியாதை கொண்ட வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

**சரத்து – 39 - A**

- சம நீதி மற்றும் இலவச சட்ட உதவி போன்றவற்றை செயல்படுத்த வேண்டும்
- பொருளாதார அல்லது மற்ற இயலாமையின் காரணமாக, எந்தவொரு குடிமகனுக்கும் நீதி மறுக்கப்படாமல் இலவச சட்ட உதவி வழங்கும் வகையில் சட்டம் அல்லது திட்டம் இயற்றி சம வாய்ப்பு வழங்கி நீதி வழங்கும் நீதி அமைப்பு முறையை செயல்படுத்த வேண்டும்.
- இதன்படி Legal Service Authorities Act – 1987 இயற்றப்பட்டது.

**சரத்து – 40**

- அதிகாரங்களுடன் செயல்படும். தன்னாட்சி பெற்ற உள்ளாட்சி அமைப்புகளை (கிராம பஞ்சாயத்துக்களை) உருவாக்க வேண்டும்.
- இதன்படி அரசியலமைப்பின் 1992 – ம் ஆண்டு 73 – வது திருத்தத்தின் படி பகுதி IX (பஞ்சாயத்துகள்) சேர்க்கப்பட்டது.

**சரத்து – 41**

உழைக்கும் உரிமை,கல்வி வேலைவாய்ப்பின்மை, முதுமை, நோய், ஊனம் மற்றும் பிற இயலாமையின் காரணமாக உதவி பெற வழிவகை செய்ய வேண்டும்.

**சரத்து – 42**

நியாயமான, மனிதாபிமான பணிச்சூழல் மற்றும் மகப்பேறு உதவிகள் செய்ய வேண்டும்.

தொழில் பிணக்குகள் சட்டம், குறைந்தபட்ச ஊதியச் சட்டம், மகப்பேறு உதவிச் சட்டம், வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், ஊழியர்கள் காப்பீடு சட்டம் போன்றவை இப்பிரிவின் கீழ் இயற்றப்பட்டன (மாற்றங்கள் செய்யப்பட்டன).

**சரத்து – 42**

பணியாளர்களுக்கு வாழ்வாதார ஊதியம், சமூக – கலாச்சார வாய்ப்புகள் வழங்கவும், குடிசைத் தொழிலை ஊக்கப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவாசய, தொழிற்சாலை அல்லது வேறுவகையில் வேலை செய்யும், நாகரீகமான வாழ்க்கை வாழும் வகையில் பணிச் சூழலும் கூடிய, ஒய்வுடன் கூடிய, ஒய்வுடன் கூடிய முழு வேலைவாய்ப்பு.

தனிநபர் அல்லது கூட்டுறவு அடிப்படையில் சிற்றூர் பகுதிகளில் குடிசைத் தொழிலை ஊக்கப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**சரத்து – 43 – A**

நிர்வாகத்தில் பணியாளர்கள் பங்கு பெற வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு செய்ய வேண்டும்.

**சரத்து – 43 – B**

**கூட்டுறவு சங்கங்களின் மேம்பாடு**

கூட்டுறவு சங்கங்களின் தன்னார்வ உருவாக்கம், தன்னாட்சி செயல்பாடு, ஜனநாயக் கட்டுப்பாட்டுடன் கூடிய, தொழில்முறை செய்ய வேண்டும்.

**சரத்து – 44**

இந்திய பரப்பெல்லை முழுவதற்கும், குடிமக்களுக்கான பொதுவான குடிமையியல் சட்டம் வரைய முயல வேண்டும்.

**சரத்து – 45**

14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டும்.

(6 வயது என்பது 2002 – ம் ஆண்டு 86 – வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி 14 வயது மாற்றப்பட்டது)

**சரத்து – 46**

கல்வி மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்தோருக்கு சிறப்பு கவனத்துடன் முன்னேற்றமும் குறிப்பாக, பட்டியல் இனத்தவர்களை அனைத்து வகையான சுரண்டல்களிலிருந்தும் சமுதாய அநீதியிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

**சரத்து – 47**

மக்களின் ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், பொது நலன்களை மேம்படுத்துவதும் குறிப்பாக, போதையூட்டும் பானங்கள், மதுபானம் மற்றும் உடல்நலனுக்கு ஊறுவிளைவிக்கும் மருந்துகளையும் தடை செய்ய முயல வேண்டும். (மருத்துவக் காரணங்களுக்கு தவிர)

**சரத்து – 48**

வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ச்சிக்காக நவீன விஞ்ஞான முறைகளை புகுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உயர்ரக பசு பாதுகாப்பும், பசுவதை தடுப்பிற்கும் தேவையான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்.

**சரத்து – 48 – A**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு, வனம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பிற்காகவும் அரசு முயல வேண்டும்.

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 இப்பிரிவின் கீழ் இயற்றப்பட்டது.

**சரத்து – 49**

நாடாளுமன்ற சட்டத்தின்படி விளம்பிய, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை, பொருட்களை, உருக்குலைவு ஆகாமல், நீக்குதல், பாழாகாமல் அழிவிலிருந்தும் ஏற்றுமதி செய்யாமலும் பாதுகாக்க வேண்டும்.

**சரத்து – 50**

நிர்வாகத் துறையிலிருந்து நீதித் துறையைப் பிரித்தல்.

**சரத்து – 51**

சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு, நாடுகளுக்கிடையே கௌரவமான உறவுகளை நிலைப்படுத்துதல், சர்வதேச ஒப்பந்தங்களை மதித்தல், சர்வதேச பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணுவதை ஊக்கப்படுத்த வேண்டும்

- சரத்துக்கள் 39 – A 43 – A 48 – A ஆகியவைகள் 1976 – ம் ஆண்டு 42 – வது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.
- சரத்து – 43 – B, 2011 – ம் ஆண்டு 97 – வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி இணைக்கப்பட்டது.
- அடிப்படை உரிமைகளுக்கும் அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும் இடையே முரண்பாடு தோன்றினால் அடிப்படை உரிமைகள் மேலோங்கி நிற்கும் என State of Madras V.Chempakam Durairajan என்ற வழக்கில் கூறப்பட்டது.
- State of Bihar vs. Kameshwar Singh என்ற வழக்கில் இரண்டும் சம அந்தஸ்து வழங்கப்பட்டது. இசைவமைந்த பொருள் விளக்க விதியினைப் (Harmonius Construction) பின்பற்ற வேண்டும் எனப்பட்டது.
- 25 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி 31 – C சேர்க்கப்பட்டது. இதில் மக்கள் நலனை முன்னேற்றும் வகையில் 39 (b) (c) யை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட சட்டம் சரத்து 14 மற்றும் 19 ஆகியவைகளை மீறுவதாக இருந்தாலும் செல்லும்.
- 31 – C ஆனது 1976 – ல் 42 – வது அரசியல் திருத்தச் சட்டத்தின்படி திருத்தப்பட்ட விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் எந்தச் சட்டமும் அடிப்படை உரிமைகளான சரத்துக்கள் 14, 19, 30,ஐ மீறுவதாக இருந்தாலும் அச்சட்டம் செல்லும் என மாற்றப்பட்டது.
- Minerva Mills vs. Union of india (1980) 42 வது திருத்தச் சட்டத்தால் 31 – C-ல் கொண்டு வரப்பட்ட மாற்றம் செல்லாது என்றும் அரசு நெறிமுறை கோட்பாடுகளும் அடிப்படை உரிமைகளும் சமநிலை படைத்தது என்றும் உச்சநீதிமன்றம் கூறியது.

**சமூக நலனை அடைய வழிகாட்டும் கோட்பாடுகள்**

- இக்கோட்பாடுகள் சமூக, பொருளாதார அரசியல் நீதியை வலியுறுத்துகின்றன.
- குடிமக்கள் அனைவருக்கும் வாழ்க்கைத் தேவைகளை வழங்குதல். ஆண், பெண் வேவைக்குச் சம ஊதியம் வழங்குதல். வருவாய் ஏற்றத் தாழ்வை நீக்குதல் போன்ற பல நெறிமுறைகளை வலியுறுத்துகின்றது.
- சமுதாய பொருள் வளங்களை, இயற்கை வளங்களை பொது நலனுக்காக நியாயமான முறையில் பங்கிடுதல்.

**காந்தியக் கோட்பாடுகளைச் செயல்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்**

- சமூகத்தில் பின்தங்கியுள்ள, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் ஆகியோரின் கல்வி மற்றும் பொருளாதாரத்தை முன்னேற்றுதல், கிராமப் பஞ்சாயத்துகளை உருவாக்குதல், குடிசைத் தொழில்களை வளர்த்தல் போன்றவை.

**பன்னாட்டு அமைதியை ஏற்படுத்த வழிகாட்டும் கோட்பாடுகள்**

- பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.

**அரசு திட்டங்களை செயல்படுத்த நெறிமுறைகள்**

- இக் கோட்பாடுகளைத் தவிர, நாடு முழுவதும் அனைவருக்கும் பொதுவான சட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றவை இதில் அடங்கும்.
- பொருளாதார உரிமைகளை பெறுதல்.
- சமநீதியும், இலவச சட்ட உதவியும்அளித்தல்.
- இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி அளித்தல்.
- போதைப் பொருட்கள், மது தடை செய்தல்.
- குடிசைத் தொழில்களை ஊக்குவித்தல்.
- நவீன முறையில் கால்நடைத்துறை, வேளாண்மையினை அமைத்தல்.
- கால்நடைகளை கொல்லுவதைத் தடை செய்தல்.
- கிராம பஞ்சாயத்துக்களை உருவாக்கி அவை தன்னாட்சி அமைப்புகளாளச் செயல்படச் செய்தல்.
- நலிவுற்ற பிரிவினரின் கல்வி மற்றும் வாழ்க்கைத்தரம் உயர்த்துதல்.
- சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.
- தேசிய நினைவு சின்னங்கள், இடங்கள், பொருட்கள் பாதுகாத்தல்.
- நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையை தனிமைப்படுத்துதல்.

winmeen.com